**தங்காலை பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தங்காலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியான 1.6 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தங்காலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பாதகமான அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்கான முத்திரை வரி வருவாய் ரூபா 70,483,141 ஆகவும், பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,736,410 அதிகமாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆண்டின் வருமானங்கள் மற்றும் பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறை அல்லாத சொத்துக்களை இனங்காணும் கொள்கைக்கு முரணாக கொள்வனவுக் கிரயம் குறிப்பிடப்பட்ட மற்றும் குறிப்பிடப்படாத 32 மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 84,249,372 மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 17,330,628 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நடைமுறை அல்லாத சொத்துக்களை சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | சபைக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் எல்லைச் சுவரை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,615,062 காணி மற்றும் கட்டிடங்களின் கீழும், 10 தொழில்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,560,222 தொகையான 10% பிடிகாசு கைத்தொழில் கடன் கொடுத்தோரின் கீழும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட முடியாத ரூபா 1,068,585 வருமானச் செலவினம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கிடப்பட்டது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானச் செலவினம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டில், சபை அலுவலகத்திற்கான திரைச்சீலைகள் வாங்குவதற்கான செலவு ரூபா 512,225 தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழும், ரூபா 330,361 கூட்டுப் பெறுமதியுடைய 37 இருப்பு உருப்படிகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் கணக்கு வைக்கப்படடிருந்தன. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானச் செலவினம மற்றும் இருப்பு உருப்படிகள் மூலதனமாக்கப்படக் கூடாது. |
| (ஊ) | 39 பட்டியல் இடப்படாத விளம்பரப் பலகைகளில் இருந்து வரவேண்டிய ரூபா 273,000 மற்றும் விளம்பரப் பலகைப் பதிவேட்டில் தவறவிட்ட ரூபா 33,800 என ரூபா 306,800 கூட்டுத்தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 05 விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டு, மீதமுள்ள விளம்பரப் பலகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது, மேலும் இந்த விளம்பரப் பலகைகள் 2023 ஆம் ஆண்டுக்கான விளம்பரப் பலகைகள் மதிப்பாய்வில் இந்த விளம்பரப் பலகை காணப்படவில்லை என்பது. | மதிப்பாய்வுகள் சரியாக மேற்கொண்டு வருமானம் பட்டியலிடப்படல் வேண்டும். |
| (எ) | 2019 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட ரூபா 209,173 மூலதனச் செலவு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்படாது, தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மூலதனச் செலவினம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டில், நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு கணினிகளின் மதிப்பு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 204,570 அதிகமாகக் கணக்கிடப்பட்டது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஐ) | பட்டியலிடப்பட வேண்டிய சபையின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா சபையின் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் வருமானத்திலிருந்து பெற வேண்டிய 01 சதவீதமான ரூபா 119,356 குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெற வேண்டிய வருமானம் மற்றும் முற்பணம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்வுக்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 117,531,023 தொகையான 04 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது. | 2016 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த பெறுமதிகளுக்குரிய பதிவேடுகளை கண்டறிய முடியாதிருந்தமை மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழொன்று இல்லாதிருந்தமை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட அபிவிருத்தியடைந்த பிரதேசங்களிலிருந்து வீதவரி அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி மதிப்பீடுகளை மேற்கொண்டு ஆதனங்களை மதிப்பிடுவதற்கு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை . | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,956,440 பெறுமதியான மீள செலுத்தப்பட வேண்டிய 392 வைப்பு மீதிகள் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவல்லை. | வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு வைப்பாளர்களுக்கு அறிவுத்தும் கடிதம் தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 02 (இ)(viii) ஆம் பந்தி | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளை இடைநிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும், சபையின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு இடர் கடன் மற்றும் விழா முற்பணமாக ரூபா 182,000 கடன் வசதிகள் வழங்கப்படவில்லை. | அந்த விழா முன்பணம் அறவிடப்பட்டுள்ளது என்பது மற்றும், இடர் கடன்கள் தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 144,176,712 ஆக காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,507,935 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் குத்தகை | 1,478,000 | 8,343,339 | 7,783,087 | 1,389,327 | 775,000 | 1,139,984 | 1,343,406 | 829,075 |
| வாடகை | 19,710,700 | 11,593,000 | 11,212,555 | 2,121,187 | 9,318,730 | 10,158,765 | 11,691,071 | 1,740,742 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,776,100 | 8,685,034 | 7,454,016 | 1,761,543 | 6,735,000 | 3,871,426 | 3,925,401 | 530,525 |
| ஏனைய வரு மானங்கள் | 23,583,000 | 26,108,412 | 23,139,379 | 3,334,533 | 2,172,180 | 4,789,508 | 5,112,378 | 365,500 |
| **மொத்தம்** | **46,547,800** | **54,729,785** | **49,589,037** | **8,606,590** | **19,000,910** | **19,959,683** | **22,072,256** | **3,465,842** |

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 584 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 1,166,900 தொகையான வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி மற்றும் 73 கடைகளிலிருந்து பெற வெண்டிய ரூபா 859,147 தொகையான வாடகை ஆகியவற்றை அறவிடுவதற்கு பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 34,400 தொகையான வியாபார வரி மற்றும் வர்த்தக வரி மற்றும் ரூபா 214,988 தொகையான கடை வாடகை அறவிடப்பட்டது என்பதும், ரூபா 548,300 தொகையான வியாபார வரி மற்றும் நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய ஏக்கர் வருமானம் ரூபா 222,427 மற்றும் வருடாந்தம் குத்தகைக்கு வழங்கப்படும் 06 ஆதனங்களிலிருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 1,261,206 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடை வாடகை ரூபா 652,332 அறவிடப்பட்டுள்ளமை மற்றும் கடந்த வருடத்தின் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 28 வியாபார அலகுகளிலிருந்து பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 1,414,726 மற்றும் 14 அறிவித்தல் பலகைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் ரூபா 342,900 அறறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 வியாபாரங்களிலிருந்து ரூபா 1,392,726 அறவிடப்பட்டுள்ளமை மற்றும் 18 இற்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளமை மற்றும் ரூபா 71,600 தொகையான கட்டணம் அறவிடப்பட்டுள்ளமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,503,188 மற்றும் ரூபா 108,511,761 ஆகம். | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,433,724 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 36,066,276 அறவிடப்பட்டுள்ளமையும், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவைப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 வாகனங்களுக்கு 2023 செப்டம்பர் மற்றும் ஒக்தோபர் 17 ஆந் திகதி வரையான நாளாந்த ஓட்டக் குறிப்பேடுகளின்படி, பெறப்பட்ட எரிபொருளின் அளவு 490 லீட்டர் ஆன போதிலும், எரிபொருள் பெறுவனவு மற்றும் விநியோக பதிவேட்டின் பிரகாரம், களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்ட அளவு 700 லீட்டர், ஆனமையால் 210 லீட்டர் எரிபொருள் வேறுபாடு நிலவியதுடன், அந்த எரிபொருள் இருப்பின் பெறுமதி ரூபா 72,710 ஆகும். | பொறுப்பு கூற வேண்டிய மூன்று ஊழியர்களிடம் இருந்து ரூபா 72,210 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | எரிபொருள் இருப்பு வித்தியாசத்தை மீட்டெடுக்க மற்றும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் 55 மயானங்கள் மற்றும் 05 வாகனங்களின் சட்ட உரிமைகள் சபைக்கு மாற்றப்படவில்லை. | காணிகள் மற்றும் மயானங்கள் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வாகனப் பதிவு உரிமைகளைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் சட்டப்பூர்வ உரிமையை கையகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | கிரயம் குறிப்பிடப்படாத 05 கட்டிடங்களின் மதிப்பீடு குறித்த தொழில் அறிவு இல்லாத சபையின் வருமான பரிசோதகர் மற்றும் நிலையான சொத்து மதிப்பீட்டு சபை உறுப்பினர்களால் தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு ரூபா 45,600,000 கூட்டுப் பெறுமதியுடையதாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மிகைப்படுத்தப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில், மதிப்பீட்டுத் துறை முறையான மதிப்பீட்டை மேற்கொண்டு மதிப்புகளைச் சரிசெய்யும். | செலவுகள் துல்லியமாக மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சபை அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதம் குறைந்த வருமானம் பெறும் பிள்ளையொன்றுக்கு 10 CR புத்தகங்கள் படியாக 66 தொகுதிகளின் பிள்ளைகளுக்கு புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக 5,683 புத்தகங்களை கூடுதலாக கொள்வனவு செய்வதற்காக ரூபா 920,646 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தமை. | எதிர்வரும் காலங்களில் தேவைக்கு ஏற்பவும், முடிவு செய்தபடியும் மாத்திரம் புத்தகங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரிவு 3.8 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக, மாணவர் திறன் திட்டத்திற்காக பரிசில்களை வழங்கும் போது அவசர கொள்வனவாக ரூபா 140,270 செலவிடப்பட்டு 120 CR புத்தகங்கள் 830 சபையின் நிதியத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளாட்சி ஆணையாளரின் அறிவுரைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொங்கிரீட் அச்சுக்கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 15 வீதிகளுக்கு பணம் செலுத்தும் போது வீதி அபிவிருத்திக்காக 1-2 தொன் உருளைகள் வீதி அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாத போது ரூபா 226,298 மேலதிகமாக செலுத்தப்பட்டது. | வீதி அபிவிருத்திக்காக 1-2 தொன் அளவான உருளையொன்று பயன்படுத்தப்பட்டது. | மேலதிகமாக செலுத்திய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொங்கிரீட் அச்சுக்கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 15 கிராமப்புற வீதிகளுக்கு, நிதிப்பிரமாணம் 156(7) இன் பிரகாரம் அரசுக்கு சாதகமான குறைவான விலைகளுடன் Grade 25 அளவான அச்சுக்கற்களை பதிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது கூடிய விலையுடனான Grade – 30 அளவான அச்சுக்கற்கள் பதிப்பதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 377,560 தொகையான நட்டம் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. | நீண்ட ஆயுளுக்காக Grade 30 கல் பதிக்கப்பட்டமை. | அரச அதிகாரிகள் அரசுக்கு சாதகமாக செயல்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத பணிக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கான்கிரீட் அச்சுக்கற்களை பதித்து அபிவிருத்தி செய்யப்பட்ட 15 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு, சாலையின் இருபுறத்திலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதில்கள் (Curb) கம்பி இழைப்பதற்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது வீதி கூறுவிலை பதிவேட்டில BO-411 இன் கீழ் உள்ள விலைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ST-055 இன் கீழ் விலைகள் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 88,656 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கொன்கிரீட் கட்டை கட்டுவதற்கு கம்பியைப் பயன்படுத்தும்போது கம்பி பிணைத்தல், வெட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுவதால் அந்த ST-055 வீதம் பயன்படுத்தப்பட்டது என்பது. | கூடுதலாக செலுத்திய தொகையை அறவிட வேண்டும். |
| (ஈ) | இரண்டு தொழிற்சாலைகளின் வடிகால் அமைப்புகளை அமைப்பதற்கு அலங்கார வேலைகளை இடுவதற்கு வீதி விலைக்கூறு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ST-112 இன் கீழ் உள்ள விலைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ST-057 இன் கீழ் உள்ள விலைகளைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் மற்றும் பணம் செலுத்தியதால் ரூபா 228,703 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கொன்கிரீட் வடிகாலின் பூர்த்தியை பெறவும் வலிமையை பாதுகாப்பதற்கும் ST – 057 வீதங்கள் பயன்படுத்தப்பட்டமை. | அதிகமாக செலுத்திய தொகையை அறவிடப்பட வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி முறையே 87 மற்றும் 123 ஆனமையால் 42 மிகைகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 42 மிகைகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியின் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் 06 ஊழியர்களுக்கு பதவியின் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளைத் தவிர வேறு கடமைகள் ஒதுக்கப்பட்டன, அதற்காக ரூபா 3,059,250 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சேவைத் தேவையின் அடிப்படையில் பிற கடமைகள் ஒதுக்கப்படுகின்றன மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் வழக்கமான பதவியுடன் தொடர்புடைய சம்பளம் செலுத்தப்படுகின்றது என்பது. | ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபை பதவியணியினுள் 08 களப்பணியாளர்கள் அதிகமாக உள்ளனர் மற்றும் 03 பணியாளர்கள் பதவி தொடர்பான | உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்கு உட்பட்டு அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அனுமதியின்றி ஆட்சேர்ப்பு செய்யக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | முறையான பணியமர்த்தப்படாமல் வேறு பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள போது 2022 திசெம்பரில் அனுமதியின்றி நாளாந்த அடிப்படையில் மூன்று தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டு 2022 திசெம்பர் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை ரூபா 1,100,849 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கடந்த 2005 ஆம் ஆண்டு பணியிலிருந்து விலகிய ஒரு ஊழியரிடம் இருந்து பெற வேண்டிய விழா முன்பணம் ரூபா 1,250 மற்றும் இடர் கடன் ரூபா 89,746 ஆகியவற்றை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |